


# 31 ஆவது நினைவுமலர்

15.06.2023


## அமரர்.கோணாமலை குமாரநாயகம்

1955.09.10 - 2023.05.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவுமலர்



தோற்றம்
1955.09.10

மறைவு
2023.05.16

# அமரர். கோணமலை குமாரநாயகம்

## திதி நிர்ணய வெண்பா

சீர்பூத்த மங்கள சோபகிருது இரண்டாயிரத்து இருபத்தி மூன்றில்
தார்பூத்த வைகாசி அமரபட்ச துவாதசிச் செவ்வாயில்
பார்பூத்த சந்தானர் குடியோன் ஸ்ரீமான் குமாரநாயகம்
நார்பூத்த காலன் கரம் பற்ற பரமபதம் சேர்ந்துவிட்டார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது அன்பு தெய்வத்தின் திருவடிக்
கமலத்திற்கு இந்நூல் சமர்ப்பணம்.
மனிதருள் மாணிக்கமாய்
அன்பெனும் பேரொளியாய்
இன்சொல் பேசி
எமக்காக வாழ்வை அர்ப்பணித்து
அன்புடன் எமைக்காற்று
அனைவரிடமும் அக்கறையாய்
பாசத்துடனும் நேசத்துடனும் இன்முகத்துடனும்
வையத்துள் சமூக அக்கறையுடன்
பொதுப்பணி பூண்டும்
இறுதிவரை வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்பு தெய்வத்தின் திருப்பாதங்களுக்கு
இம் மலரினை சமர்ப்பணம் செய்கின்றோம்.
ஓம் சாந்தி.. சாந்தி.. சாந்தி.

~ குடும்பத்தினர் ~

எங்கள் இதயத்தில் விழுந்த வெட்டு
இந்தக் கல்வெட்டு
ஆகியோன் : சம்பூர் சச்சிதானந்தம்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

- சிவமயம் -



# பஞ்சபுராண மாலை

## விநாயகர் துதி

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

- திருச்சிற்றம்பலம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகளின் போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை சரிதம்
## அமரர் கோணமலை குமாரநாயகம்

(மேனாள் தபாலகர், அறிவிப்பாளர், சம்பூர் ஆலய பரிபாலன சபை உபசெயலாளர், சம்பூர் அரசையாடி விநாயகர் நாகாம்பாள் ஆலய பரிபாலன சபை தலைவர், சம்பூர் ராமகிருஷ்ணா விளையாட்டு கழக தலைவர், அரச ஊழியர் ஓய்வூதிய சங்க தலைவர், தி/மூ/சம்பூர் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் மற்றும் ஊடகவியலாளர்)

குளக்கோட்டு மன்னனால் பெயரிட்டு குடியமர்த்திய சம்பூரணப் பதியில் கணபதிப்பிள்ளை கோணாமலை தங்கம்மா தம்பதியினருக்கு 1955ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பத்தாம் நாள் சனிக்கிழமை (1955.09.10) ஐந்தாவது கடைக்குட்டியாக குமாரநாயகம் திருநாமத்தில் செல்வப் புதல்வன் அவதரித்தார்.

சிறுவயதில் குறும்புத்தனம் நிறைந்தவராக வளர்ந்து வரும் காலத்தில் 1960 இல் சம்பூர் மகா வித்தியாலயத்தில் தனது பள்ளி படிப்பை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் பள்ளி செல்வதில் நாட்டம் காட்டாது நண்பர்களுடன் காடு, மேடு, கடல், குளம் என சுற்றி திரிந்தார். தாயாரின் கண்டிப்பால் ஒருநாள் அவரின் புத்தகங்களை எல்லாம் எடுத்து முற்றத்தில் வீசி எறிந்து, "இனிமேல் நீ பாடசாலைக்கு போக வேண்டாம் கடல், குளம் என்று சுற்று அதுவே உனக்கு நல்ல வாழ்க்கையைக் தரும்" என கடிந்து ஏசியதன் விளைவாக அன்று தனது தோளில் ஏற்றிய புத்தகப்பையை SSC படிப்பு முடியும் போதுதான் இறக்கி வைத்தார்.

பாடசாலையின் பரிசளிப்பு விழாக்களில் தொடர்ச்சியான வரவுக்காக வருடந்தோறும் பரிசில்களைப் பெற்றுக் கொள்வார். அவருடன் படித்த நண்பர்கள் கூறுவார்கள், காலையில் பாடசாலையின் படலையை முதலில் திறப்பது குட்டி தான், என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டி என்றே பெயரில் அவரை செல்லமாக வீட்டாரும் நண்பர்களும் அழைப்பார்கள். பாடசாலையின் முடிவிலும் இறுதியாகச் செல்பவரும் இவர்தான் என்றும் கூறுவார்கள். இவர் மீது ஆசிரியர்கள், அதிபர்கள் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். அப்போது அதிபர்களாக இருந்த திரு.டீஜி சோமசுந்தரம், திரு.கோ. சண்முகநாதன் போன்றோர் நான் படித்த காலத்தில் அவரின் பெயரால் என்னை அறிந்தார்கள் அவ்வாறு பெயர் சொல்லும் பிள்ளையாக இருந்தார்.

சம்பூர் மகா வித்தியாலயத்தின் பெயரை நிலை நாட்ட கிழக்கு மாகாணத்தின் குறுந்தூர (100 மீட்டர்) ஓட்ட சம்பியனாகவும் மரதனோட்ட சம்பியனாகவும், பல பிரதேசங்களும் அறியப்பட்டவராக காணப்பட்டார். அயல் பாடசாலைகளில் நடைபெற்ற இல்ல, வட்டார விளையாட்டுப் போட்டிகளில் அஞ்சல் ஓட்ட குழுவினை வெற்றிப் பாதையில் இட்டுச் சென்றவராகவும் காணப்பட்டார். இந்தக் குழுவில் வே.சிறிதரன், பே.ராமநாதன், வே.யோகேந்திரா, சரா.புவனேஸ்வரன் போன்ற இன்னும் பலர் இணைந்திருந்ததாக என்னிடம் கூறுவார். இதனால் இவர் ஒரு ஓட்ட வீரனாகவும் மதிக்கப்பட்டார். இதனை அமரர்.சிங்காரவேலு (முந்நாள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்) நான் திருமலையில் படித்த காலத்தில் அடிக்கடி கூறுவார்.

75 காலப்பகுதிகளில் சம்பூரில் மணி சவுண்ட் என்ற பெயரில் ஸ்பீக்கர் மணியம் என்றறிந்த பி.எஸ்.மணியம் அவர்கள் ஒலிபெருக்கி துறையில் பாரிய பணியை செயற்படுத்தி வந்தார். இவரே குமாரநாயகம் அவர்களை அறிவிப்பாளராக அறிமுகம் செய்தார். அந்தக் காலத்தில் இலங்கை வானொலியின் அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜா பிரபல்யமாக திகழ்ந்த போது, சம்பூரில் சிலம்பொலி நாடக மன்றம் பின்னர், சம்பூர் தமிழ் கலா மன்றம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கத்தை கலைஞர் அமரர்.பு.செல்லக்குட்டி, அமரர்.பி.எஸ்.மணி, அ.குகராஜா, அமரர்.வ.மாணிக்கராசா, அமரர்.வே.ஸ்ரீஸ்கந்தராஜா, அமரர்.இ.தவராசா, இ.தங்கவடிவேல் க.ஜெகநாதன், சோ.சண்முகநாதன், இ.பத்மநாதன் இன்னும் பலர் போன்றோர் உருவாக்கி, அமரர் பிஎஸ் மணியின் கதைகருவில், கலைஞர் அமரர்.பு.செல்லக்குட்டி வசனத்தில் "தங்கையின் பாசம்" நாடகம் திரைப்படத்துக்கு இணையாக கிழக்கின் திரையரங்குகளில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதற்கான அறிவிப்பாளராக **K.K.**குமார் என்ற பெயரில் கே.எஸ்.ராஜாவைப் போல் மிகவும் வேகமான சொற் பிரயோகங்களைக் கொண்ட அறிவிப்பை நிகழ்த்தி பிரபல்யமாக இருந்தார். சம்பூர் சித்தி விநாயகர் ஆலயத்தில் திருவிழா காலங்களில் நடைபெறுகின்ற சின்ன மேளம் இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் அறிவிப்பாளராகவும் இசை கழகங்களுக்கான அறிவிப்பாளராகவும் அந்த பிரதேசத்தில் இவர் மட்டுமே ராஜவாக திகழ்ந்தார். அயல் கிராமமான கட்டைபரிச்சானின் கலைவாணி இசைக் குழுவிலும் இவர் அறிவிப்பாளராக செயல்பட்டார். என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னாளில் பாட்டுக்கார தியாகன் என்றழைக்கப்படும் தியாகராஜா, ஹார்மோனியம் சிவசேகரம் மற்றும் இவர் சேர்ந்து "நீரோ" இசைக்குழு என்று ஒன்றை அமைத்து அதன் தலைவராக இருந்து அறிவிப்பாளராகவும் டோள்கி வாத்திய கலைஞராகவும் திகழ்ந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக இவருக்கு சம்பூர் தமிழ் கலா மன்றம் "மதுரக் குரலோன்" என்ற விருதினை 70 காலப்பகுதியில் வழங்கியது. பின்னாளில் அக்கழகம் ஸ்ரீ முருகன் இசைக்கழகம் என பெயர் பெற்று அதிலும் அறிவிப்பாளராகவும் சில காலம் தலைவராகவும் திகழ்ந்தார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

75களில் இந்து இளைஞர் மன்றம் சம்பூரில் ஸ்தாபிக்கப்பட்டபோது திரு.இ.தங்கவடிவேல் (RDO) தலைவராகவும் திரு.அ.குகராஜா செயலாளராகவும் கோ.குமாரநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாளராகவும் இருந்து அறநெறி வகுப்புக்கள் மற்றும் ஆன்மீக சேவைகளை சம்பூர் மக்களுக்கு ஆற்றி வந்தார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத் துறையில் YMTA என்ற கைப்பந்து விளையாட்டு கழகத்தின் தலைவராகி. பின்னாளில் அது ராமகிருஷ்ணா விளையாட்டு கழகமாகியது. தலைவராக இறக்கும் வரை செயல்பட்டார். அகில இலங்கை முழுவதும் பல வெற்றிகளை பெற்று முன்னணியில் திகழ்ந்த கழகமாக விளங்கச் செய்தார். கழகத்தின் வீரர்களை அரவணைப்பதிலும் அவர்களுக்கான உதவிகளை வழங்குவதிலும் ஒரு சிறந்த தலைமைத்துவத்தை மேற்கொண்டவராக காணப்பட்டார். நானும் இக்கழகத்தின் விலையாட்டு வீரனாக திகழ்ந்ததில் பெருமைகொள்கிறேன். அவரது வீரர்கள் கடைசிவரை தலைவர் என்றே அழைத்தனர்.

88 களில் சம்பூர் அரசையடி விநாயகர் நாகாம்பாள் ஆலயத்தின் பரிபாலன சபை தலைவராக பொறுப்பேற்று பல புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வைகாசி விசாக பொங்கல் நிகழ்வினை வருடா வருடம் திறம்பட நடத்தி ஆன்மீகத்திற்கு சேவையாற்றினார்.

அத்தோடு சம்பூர் ஆலய பரிபால சபையின் பன்னிரு குடி முகாமையாளருள் சந்தானர் குடியின் முகாமையாளராகி சம்பூர் ஆலய பரிபாலன சபையின் உப செயலாளராக செயல்பட்டு சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம், சித்தி விநாயகர் ஆலயம், கிராம தேவதைகள் வணக்கம் அனைத்துக்கும் ஆன்மீகத் தொண்டாற்றினார். சமூக நலன் வேலைகளிலும் அர்ப்பணிப்போடு ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி/மு/சம்பூர் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராக 2000 ஆண்டுகளில் இருந்து நோய்வாய்ப்படும்பரை சிறப்புற பணியாற்றினார். இரவு நேர வகுப்புக்கள், பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்திக்கும் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கும் உறுதுணையாக அதிபரோடும் ஆசிரியர்களோடும் சேர்ந்து செயல்பட்டார்.

அத்தோடு 2016ஆம் ஆண்டு சம்பூர் மீள்குடியேற்றத்தின் பின்னர், அரச ஊழியர்கள் ஓய்வூதியர்கள் என அனைவரது உதவிகளும் மறுக்கப்பட்டதால், "அரச ஊழியர் ஓய்வூதியர் சங்கம்" என ஆரம்பித்து அதன் தலைவராக கோ.குமாரநாயகம் அவர்களும், செயலாளராக அ.குகராஜா அவர்களும், பொருளாளராக திரு.ந.ராசலிங்கம் அவர்களும் செயற்பட்டு நலனோம்பு வேலைகள் புரிந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் எண்பதுகளில் இவருடைய அண்ணன் கலாபூசணம் கோணமலை திரவியராசா அவர்கள் தினபதி, சிந்தாமணி, தந்தி, மித்திரன், உதயன், சஞ்சீவி போன்ற பத்திரிகைகளுக்கான ஊடகவியலாளராக செயல்பட்டு சேவையாற்றிய போது, இவர் இலங்கையின் முதன்மை நாளேடான "வீரகேசரி" நாளிதழின் ஊடகவியலாளராகவும் செயற்பட்டு மூதூர் பிரதேசத்தின் செய்திகளை சுடச்சுட மக்களுக்கு வழங்கி ஒரு ஊடகவியலாளராக சிறந்த சேவையாற்றினார். இவ்வாறு இவரின் பொதுச் சேவைகளை சொல்லில் அடங்க முடியாது மேலும் சொல்லிக் கொண்டே போகலாம். 65களில் தனது அக்காவுடன் திரியாயில் சில காலம் வசித்து வந்தார் அந்த நேரத்தில் அங்கு பாடசாலைகளில் நடைபெற்ற ஓட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் தந்தையுடன் சேர்ந்து வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு சம்பூர் பிரதேசத்திற்கான கமத்தொழில் செயற்பாட்டிலும் ஒரு கமக்காரராக முன்னின்று உழைத்தார்.

கல்வி கற்று முடிந்த காலையில் இலங்கை தபால் திணைக்களத்தில் அரச ஊழியராக பணியாற்றினார். இவர் தபாலகராக 35 ஆண்டுகள் சேவையாற்றிருந்தார். மூதூர், மட்டக்களப்பு, திருகோணமலை, கட்டைப்படைச்சான், சம்பூர் போன்ற தபாலகங்களில் உன்னத சேவை புரிந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. இவரது திருமண வாழ்க்கை இனிதாக அமைந்தது, 1992 இல் சம்பூரைச் சேர்ந்த செல்லத்தம்பி வடிவம்மா தம்பதிகளின் புதல்வி உதயசந்திரிக்காவை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு மூத்தவராக நிரோசனா என்ற மகளும், இரண்டாவதாக கோபிசாந் என்ற மகனும், மூன்றாவதாக சுதர்சனா என்ற மகளும் மூன்று மக்கட் செல்வங்களாக ஈன்றெடுத்தார்கள். மூத்த மகளை உயர் கல்வி கற்க செய்து சம்பூரைச் சேர்ந்த நாகநாதன் இந்திராதேவி தம்பதிகளின் புதல்வன் திரு.நா.பிரசாந்தன் (லண்டன்) என்பவருக்கு திருமணம் செய்து லண்டனுக்கு அனுப்பி வைத்தார். மகன் கோபிசாந்துற்கு வீடமைப்பு அமைச்சின் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளராக அரச பணி பெற்றுக்கொடுத்து தனது குழந்தைகளை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைத்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்ததன் பின்னர் அவருக்கு வைத்திய சிகிச்சை அளிப்பதற்காக அவருடைய மகள் நிரோசனா-பிரசாந்தன், சுதர்சனா, மகன் கோபிசாந் மூவரும் பல வைத்தியசாலைகளிலும் சிகிச்சை அளித்து காப்பாற்றும் நோக்கில் முயற்சிகளை மேற்கொண்டு இருந்தார்கள். காலனின் அழைப்பு நெருங்கியதும் இறுதியில் சிகிச்சை பெறுவதற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்ட போதும், பயனளிக்காததால், 2023.05.16 அன்று மாலை 8.10 மணியளவில் அன்னாரது உயிர் இவ்வுலகை விட்டு பிரிந்தது. எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி பரமபதம் அடைந்துவிட்டார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"** என்ற வள்ளுவனின் குறளுக்கு அமைய வாழ்ந்து இன்று தெய்வமாகிவிட்ட எமது அன்பு தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம்.. சாந்தி... சாந்தி... சாந்தி...



தொகுப்பு : சம்பூர் சச்சிதானந்தம் மருமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் விருத்தம்
## ஆசிரியர்

தனிப்பெரும் இனமாய் தலை நிமிர் உடனே
தனித்துவ வாழ்வை தமக்கென வகுத்து
தன்னிலைப் பெருமை தமிழன் தரணியில்
தமிழ் நகர் கோணமலை குளக்கோட்டன் பதியினில்
துயில் மறந்து கதிர் அசைத்து தென்றல் பாடும் வயல் காடும்
மயிலாடும் ஒயில் கொண்ட தெருவோரத் தென்னைகள்
கடலோரம் அலை வந்து கல்நண்டு கரையோடு ஒப்பமிடும்
உடலோடு உதிரமாய் உறைந்திட்ட ஊரோடும்.
அவனியிலே அத்தனையும் காத்து நிற்கும் பத்திரகாளியும்
பவனி வந்த குளக்கோட்டன் பெயரிட்ட சம்பூரில்
பன்னிரு குடி கொண்ட சந்தானர் குடிமரபில்
தொன்மைதிரு குடிகொண்ட வேளாளர் பெருமகனாய்
கோணாமலை எனும் அருந்தவப் பெரியோன்
தங்கம்மா என்றணங்கை மணந்திட்ட பேறாய்
வந்துதித்த ஐவர் மணிச் செல்வங்களாய் தரணி கண்டு
கடைக் குட்டி குமாரநாயகம் உடன் பிறந்தார்.
மூத்ததிரு அகிலாண்டநாயகியும் உற்ற நிலை
பாக்கிய பேறாம் நாகபாக்கியமும் உடன்
உற்ற சாமி என்ற திரவியராசாவும் அடுத்த
மணி யென்னும் மணிராசாவும் உடன் பிறந்தார்.
செல்லமாய் வளரும் குட்டி குமாரநாயகம்
அறிவொளி மேலோங்கி சம்பூர் பள்ளியிலே கற்றுத் தேர்ந்தார்.
அஞ்சல் திணைக்களத்தில் தபாலகராக பணிபுரிந்த காலை
சமூக அக்கறை மிகுந்தநிலை பணி ஆற்றலானார்.
நல்லறம் இல்லறமாக செல்லத்தம்பி வடிவம்மா தம்பதியரின் புத்திரி
உதயாவை கரம் பிடித்து இன்புற்று வாழ்ந்த காலை
நிரோசனா கோபிசாந் சுதர்சனா மூன்று செல்வங்களை
முத்தாக ஈன்றெடுத்து அவனியிலே வாழ வைத்தார்.
நிரோசனா பிரசாந்தனை கரம் பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேஷிகா என்ற பேத்தியும் வரமெடுத்து
லண்டனில் வாழச் செய்தார்.
கோபிசாந்தை. வீடமைப்பு அமைச்சின்
அரச பணி அமர்த்தி வைத்தார்.
தன் உறவுகளை வையத்துள்
வாழ்வாங்கு வாழ வழி சமைத்தார்.
கனவெல்லாம் நினைவெல்லாம்
தன்னுறவை உயர்த்தவென்று
ஊண் உறக்கம் பாராமல்
உடல் உள உழைப்பாலே
தம்முறவை உயர்த்திவிட்ட
குலதெய்வம் ஆவார்.
மனமெல்லாம் கனக்கிறது
எப்போது காண்போம் இனி.
கரும்பென இனித்த வாழ்வில்
அள்ளி வந்த செல்வங்கள் சொல்லில் எழா.
உடலுரம் கொண்ட நெஞ்சுடையான்
குற்றம் கழந்து பேசுவதில் அஞ்சானவன்
நோய் துன்பம் என்றொரு நாளும் படுத்தறியான்
கடஸ்து எண்ணம் காலத்தில் பதிவு செய்யன்.
மாறா நோயில் குடிகொண்டு
மட்டுநகர் ஆஸ்பத்திரிக்கு போன பின்
மறுநாள் இடி தாங்கும் இதயம் கொண்டோம்.
காலன் நாட்குறித்தான்,
திடம் கொண்ட நெஞ்சன்,
எங்கள் புன் சிரிப்பு வேந்தன்
16.05.2023 இரவு 8.10 மணயாகில்
பதுமையாய் உறங்கி,
தன் புன்னுடலை களைந்து விட்டு
பரமபதம் சேர்ந்து விட்டார்.

**ஓம்... சாந்தி... சாந்தி... சாந்தி...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா ம.நாகபாக்கியம் புலம்பல்


மண்ணில் உணவளித்து பண்பட்ட வாழ்வு தந்தீர்
எண்ணில் கருமங்களை எடுத்தியம்பி செய்ய வைத்தீர்.
விண்ணில் சென்றிடவா புன்உடலை விட்டெறிந்தீர்.
கண்ணில் வடியுது தம்பி பாசத்தின் நீர் தாரை.
திரியாய் பிலவுதனில் என் தோளோடு உற்றிருந்தாய்.
வாட்டும் வறுமை நாளில் வருமானம் தந்தளித்தாய்.
விட்ட குறையின்றி என்மக்கள் மீது அன்பு கொண்டாய்.
பெட்டியில் கண்ட தாலே கண்களை நனைக்குதையா.
முந்தைநாள் கதைத்துவிட்டு ஆசுபத்திரி சென்றிருந்தீர்.
மாறாநோய் கண்டதாலே வைத்தியம் பலிக்கவில்லை.
மரபு அழியும் என்று வேதனை கொண்டிருந்தீர்.
உறவு சேர்த்தெடுத்து உன்பணி தொடரவைப்பேன்.
கற்ற வித்தை அனைத்தும் உன்னில் பெற்றெடுத்து.
நற்றவம் நனி விளங்க நம் செல்வங்களை சேர்த்தெடுத்து.
மற்றவன் பகையறுத்து மாநிலத்தில் நிலை தோங்க.
உற்ற துணை நீ செய்வாய் தெய்வமாய் நின்று தம்பி.
உன் ஆன்மா பரமபதம் எய்தட்டும்.

## மாமி - செ.வடிவம்மா புலம்பல்

என் மகளை கரம் பிடித்து வாழ்வாங்கு வாழ வைத்தாய்.
நின் உழைப்பில் நிலையாக சிறப்புடனே வாழ்ந்து வந்தாய்.
தன் உறவு காத்து நின்று என் உறவில் உதவி தந்தாய்.
மன்னு புகழ் மாண்புடனே வாழுகின்ற நேரமதில்.
கொல்லு நோய் குடி கொண்டு உன்னுடலத்தை அழித்ததென்ன.
சொல்லு புகழ் காளி ஒன்றும் உனக்காக செய்யவில்லை.
விண்ணுலகம் கொண்டாணாய் வீண் வணக்கம் செலுத்த மாட்டேன்.
என்ன செய்வேன் என் மகளும் பேரப்பிள்ளைகளும் அனாதை ஆகிவிட்டார்.
உன் ஆன்மா பரமபதம் எய்தட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2014 இல் தபாலக பதவியிலிருந்து ஓய்வுபெற்ற நிகழ்வில்




சேவையைப் பாராட்டி
சேனையூரில் கௌரவிப்பு
நிகழ்வில்



2006 இல் சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி
அம்பாள் ஆலய திருவிழாவின்
போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழரசுக்கட்சியின்
ஆதரவாளாராக



இராமகிருஸ்ணா
விளையாட்டு கழகத்திற்கு
விளையாட்டு உபகரணங்களை
பெற்றுக்கொண்டபோது



சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கான
ஜெனரேட்டர் உபயகாரர்களிடமிருந்து
பெற்றுக்கொண்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய பணியை பாராட்டி சம்பூர் தமிழ்க் கலாமன்றம் விருது வழங்கிய போது



# போராட்டமும் உறுதியான வைராக்கியமுமே சம்பூரின் மீள்குடியேற்றத்திற்கு காரணங்களாகின

## பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம்





சம்பூர் மீள்குடியேற்ற செயற்பாடுகளில் பங்குபற்றிய போது

(மூதூர் நிருபர்)

மக்களின் போராட்டமும் உறுதியான வைராக்கியமுமே சம்பூரின் மீள்குடியேற்றத்திற்கும் பத்திரகாளி அம்பாளின் மூலஸ்தான சங்குஸ்தாபன அடிக்கல் நாட்டு விழா நடக்கவும் காரணமாக அமைந்தன என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார். பத்திரகாளி அம்பாளின் ஆலய அடிக்கல் [illegible] நாட்டு விழா [illegible] கொண்டு போது [illegible] தெரிவித்தார்.

ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் க.திருநடராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தர்மகர்த்தா வேதாகமமாமணி சோ.இரவிச்சந்திரக் குருக்கள் ஆசியுரை மற்றும் பூசைகளை நடத்தி பணியை ஆரம்பித்துவைத்தார்.

இங்கு மேலும் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிடுகையில்,

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த சம்பூர் பிர [illegible]

[illegible]மும் உறுதியான போராட்டமும் காரணமாக அமைந்தன அதன்காரணமாகவே சேதமான பழமையான வரலாற்றை கொண்ட இந்த ஆலயத்தின் மூலஸ்தாபன அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் வருவதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் கலந்து கொள்ளவில்லை. இவ்வாலயத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்களின் உறுதியான [illegible] எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகனுக்கு அரச நியமனம் பெற்றுக்கொடுத்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் மகளின் திருமண நிகழ்வின் போது





பேத்தி கேஷிகாவுடன்



சந்தனக்குடியின் திருவிழாவின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970 களில் விளையாட்டு வீராக
திகழ்ந்தபோது



1970 களில் அறிவிப்பாளராக
திகழ்ந்தபோது



அக்காவின் 75 ஆவது பிறந்தநாளில் (2021.07.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
ஆலய பரிபாலன சபை உறுப்பினராக



2022 இல் சந்தானக்குடியின் தீர்த்தவிழாவின்
பட்டு எடுத்து வரும் நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஸ்ணா விளையாட்டு கழகத்தின் வெற்றிக்களிப்பில்











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மனைவி உதயசந்திரிகா,
## மக்கள் - நிரோசனா, கோபிசாந், சுதர்சனா புலம்பல்

மாற்றார் மதிப்பாக மாண்புடனே என்னை கரம் பிடித்தாய்
ஏற்றார் எனக்கிருந்தும் இல்லத்தில் என்னை விளங்கவைத்தாய்
தோற்றாய் காலனிடம் காற்றாகி சென்று விட்டாய்
ஆற்றாத துன்பமையா தேற்றுவார் யாரையா.
தலை நிமிர்த்தி கரிசனையாய் வாழ வைத்தாய்.
நிலை உயர்த்தி மும்மணிகள் மக்களாய் பெற்றெடுத்தோம்.
கலை தந்து கல்வி கொடுத்து உயர்த்தி விட்டாய்.
சிலை விழுந்த உன் நிலையெண்ணி நித்தமும் சொரிக்கின்றேன் கண்ணீரையா.

நடைதனில் நாட்டமுற்ற நண்பராய் பலரைப் பெற்றீரப்பா,
கிடைத்த பேற்றை உகந்து எமக்களித்தீரப்பா,
அடைத்த வழி அத்தனையும் களைந்து தந்தீரப்பா,
இல்லறத்தில் இணைய வைத்து லண்டனுக்கு அனுப்பி வைத்தீரப்பா,
படைத்தநின் நோயை வெல்ல நாளும் கடமை செய்தோம்.
உடைத்த எம் கண்ணீர் காட்டி காளிக்கு நேர்த்தி வைத்தோம்.
சடைத்த குழல் காளியாட்சி ஏனோ கைவிட்டார்.
குலம் விளங்க வாழ்வில் சிறந்தாயப்பா.
பலம் முழுதும் எம்நிலை சொல்லுத்தி நின்று
நலம் குன்றி படுத்தவேளை நாம் திகைத்திருந்தோம்- நின்
நலம் பற்றி கவலை கொண்டு துடித்தோமப்பா.
மனமிருந்தால் வரும் பிறவிதனில்
நின் குடும்பமதில் நல் மகவாகப் பிறப்பாயாக.

உன்னை பிரிந்து வாடுகின்றோம் எமதன்பே.
நின் நினைவை எப்போ யாம் மறப்போம்.
கண்ணீர் வழிந்தோடி கடலாகுதே எம்முயிரே.
எம் பிரார்த்தனையால் நின்னான்மா சாந்தி பெறட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் - நா.பிரசாந்தன் (லண்டன்) புலம்பல்

கோணாமலை தங்கம்மா செல்ல மகனாகப் பிறந்து
என் துணை நிரோவின் அன்புத் அப்பாவாக திகழ்ந்து
என்னை மாப்பிளையாக தேர்ந்தெடுத்த என் மாமாவே.
எடுத்த பிறவி பயனுறவே ஏற்ற பணி திறம்பட முடித்து
உற்ற துறைகளில் உயர்வாகச் செய்து
நற்றமிழ் மணக்க நற்பணி நவின்று
உற்றார் உறவினரை உளமார ஏற்று
அன்பில் பண்பில் உயர்ந்து
அறிவில் செயலில் சிறந்து
பேரன்புத் தந்தையாகி
சிந்தை நிறை மாமனாக வாழ்ந்து,
பரமபதம் அடைந்துவிட்ட தங்களான்மா
இறைவனடி சேரட்டும்.

ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி.....

## மருமக்கள் - ம.சச்சிதானந்தம், ம.ஶ்ரீதர ஆனந்தம், ர.நிர்மலா, ர.புவனந்தி, சி.உதயபானு புலம்பல்

இளவல் போல் உலாவி வந்து
இதயத்தில் அமர்ந்த குஞ்சு மாமா - நின்
உடல் விழுந்த செய்தி கேட்டு
செயலிழந்து போனதுவே எங்கள் குஞ்சு மாமா.
சிறு வயதில் வளர்த்தெடுக்க கரம் கொடுத்தாய்.
நன்கு பணி செய்யவென்று எமை வழிப்படுத்தி
புதுமைகளை புகுத்தச் சொன்னாய்.
நல்லறத்தில் இணைத்து வைததாய்.
அரும்பாடு பட்டு பயனுற வளர்க்கலானாய்.
நோய் கொண்டு பேழையில் உறங்கிவிட்டீர்.
இனி எப்போது காண்போம் குஞ்சு மாமா
கண்கள் தாரையாகுதே குஞ்சு மாமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின் ஆன்மா பரமபதம் எய்தட்டும்.
ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி.....

**மைத்துனர் மைத்துனி - கோ.விமலாதேவி, செ.நித்தியானந்தராசா (பாலு), ர.பத்மாவதி (லண்டன்), செ.பரமேஸ்வரன், ஜெ.ரஜனிதேவி, சி.கௌரிதேவி புலம்பல்**

ஆல விருட்சமாய் நீண்டு அனைவருக்கும் நிழல் கொடுத்தீர்
அவனியிலே அறிவுப் பெட்டகமாய் அல்லும் பகலும் உழைத்து நின்றீர்
ஈனமின்றி தரணியிலே உயர்ந்தவராய் வாழ்ந்து நின்றீர்
உமது மக்கள் இணைந்து வாழ உமது வாழ்வை அர்பணித்தீர்
ஆதரித்து எம் குழந்தைகளை அரவணைத்து அருமை சொன்னீர்
சேர்ந்திணைந்து எம்மை வாழச் சொன்னீர்
நொந்து போன உடல்கண்டு ஏங்கி நின்றோம்
புன்னகையில் உங்கள் முகம்
பூத்து நிற்கும் மலர்களைப் போல்
பார்த்து இருந்த எம் குழந்தைகளின் ஏக்கம் என்று? குறையுமையா
காலனவன் ஓலை தந்து அழைத்துவிட்டான்
ஓய்வெடுக்க சென்று விட்டீர்.
நின் ஆன்மா பரமபதம் எய்தட்டும்.

ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளை பி.கேஷிகா (லண்டன்) புலம்பல்

லண்டனில் பிறந்தேன் நயம் பட வளர்ந்தேன்.

அம்மப்பா உனை கண்டிட வந்தேன் முத்தம் பலமுறை தந்தேன்

அண்டியிலிருந்து தொட்டுப் பிடித்தேன் அம்மப்பா,

விண்டு சொல்ல முடியவில்லை இனி வந்தும் யாரை காண்பேன் அம்மப்பா.

கருவில் உருவாகி தனி மகளாய் அவதரித்து

உருவில் சிறிதாய் உளமறியா நானும்

அன்னிய தேசம் நின்று அகலை ஒன்று கூட இல்லை.

அன்புடன் காண வந்தேன்.

உருவம் உடைந்து உளமும் நொந்து இருந்தாலும் - என்னை

அள்ளி அணைத்து அன்பால் கொஞ்சி மகிழ்ந்து

தங்கக்குட்டி, செல்லக்குட்டி என்று தூக்கி திரிந்தீரே அம்மப்பா.

இனி இங்கு வந்து யாரைக் காண்பேன் அம்மப்பாவே..நின் ஆத்மா சாந்தி பெறட்டும்..

ஓம் சாந்தி.... சாந்தி... சாந்தி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

கண்பட்ட பொலிவு கண்டு காலனவன் புன்னகைத்தான்.
புண்பட்ட மேனிதன்னை புரிந்தவனே புறக்கணித்தான்.
மண்பட்ட உடல் விடுதல் இயற்கையின் விதி தானே.
பண்படுவோம் ஆற்றிடுவோம் தேற்றிடுவோம்
ஆன்மா சாந்தி பெற.

ஓம் சாந்தி..... சாந்தி.... சாந்தி....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப்புத்தக அனுதாப தொகுப்புக்கள்

**Pushparajah Rajanayagam**
17 May

அஞ்சலியும் அவனுடனான நினைவுகளும்..........

கோணாமலை குமாரநாயகம் ( குட்டி )
சம்பூர் .......

முதலில் எனது நண்பன் குட்டிக்கு எனது அஞ்சலிகளை தெரிவித்து கொள்கிறேன்........

MG ராமசந்திரன் பலருக்கு தெரியாது ஆனால் MGR என்றால் எல்லோருக்கும் நன்கு தெரியும். அது போன்று குமாரநாயகம் என்பதை விட குட்டி என்பது பிரபல்யமான பெயர். அதனால் குட்டி என்ற பதத்தையே இங்கு பாவிக்கிறேன்.

சம்பூரில் ஓர் வித்தியாசமான மனிதர் சிறு வயதில் நாங்கள் படிப்பை விட பொழுது போக்கில் நேரத்தை செலவு செய்வோம் ஆனால் குட்டியோ தனது முன்னேற்ற சிந்தனையில் செயல்படுவார் ..

பாடசாலையில்.....

பாடசாலையில் படிக்கும் காலங்களில் பல துறைகளில் தன் திறமையை வெளிப்படுத்தி இருந்தார். என் மனதில் பதிந்ததில் மறக்க முடியாதது பாடசாலை திறந்தவுடன் உள் செல்லும் முதல் மாணவன் குட்டியாகதான் இருக்கும்.

பாடசாலையில் நடைபெறும் அத்தனை நிகழ்வுகளிலும் பேண்ட் வாசிப்பவர் குட்டிதான். எனக்கு வியப்பாக இருக்கும் யாரிடமும் சென்று கற்று கொள்ளவில்லை. நான் எப்படி பழகினாய் என்று கேட்டதற்கு தானாக பாடல்களை கேட்டு பழகியதாக சொல்வான். குட்டி தமிழ் நாட்டில் பிறந்து இருந்தால் இளையராஜாவுக்கே தண்ணி காட்டி இருப்பான்.

இன்றும் ஞாபகம் இருக்கிறது மூதூரில் நடந்த மரதன் ஓட்ட போட்டியில் வெற்றி பெற்றார் அதற்கு நானும் ஆதரவு கொடுக்க சென்று இருந்தேன் அப்போது சொன்னான் எங்களை ஊக்குவிக்க யாரும் இல்லை அல்லது எவ்வளவோ சாதிக்க முடியும் என்றான்

பாடசாலையில் திரு பாலசிங்கம் ஆசிரியர் தலைமையில் சாரணியர் அமைப்பு இருந்தது. அதில் நான் மயில் அணியில் இருந்தேன். குட்டியும் என்னுடன் இருந்தான் வீடுகளுக்கு சென்று விறகு கொத்தி கொடுத்தல் துப்பரவு செய்து கொடுத்தல் என பல சந்தோசமான காலமாக இருந்தது திருகோணமலையில் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடந்த சாரணிய பாசறையில் கலந்து சிறப்பித்தோம் பல நண்பர்களை உருவாக்கினோம் எனக்கு ஞாபகம் சேனையூர் கிருஷ்ணபிள்ளை, ரெட்ணசிங்கம் போன்றோர். சேனையூர் ம வி த்துக்கு முன்னாள் பா உ திரு தங்கத்துரை சிக்கரும் சம்பூருக்கு யாழ்பாணத்தை சேர்ந்த திரு பாலசிங்கமும் பொறுப்பாக இருந்தார்கள். அந்த நேரத்தில் குட்டியுடனான ஞாபகங்கள் நிறையவே உண்டு.

தான் படித்த பாடசாலையான சம்பூர் ம வி இல் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிட தக்கது. பாடசாலை சம்பந்தமான விடயங்களில் பல தடவை தொலைபேசியில் உரையாடியுள்ளோம்.

கலை இலக்கியம் ......

மூதூர் பகுதியில் நன்கு அறிந்த ஓர் அறிவிப்பாளர் குட்டி என்பது குறிப்பிடதக்கது. சம்பூர் ஸ்ரீ முருகன் இசை குழுவின் தலைவராகவும் அறிவிப்பாளராகவும் செயற் பட்டார்.

சம்பூர் தமிழ் கலாமன்றத்தினால் நடாத்தப்பட்டு வந்த பல நாடகங்களில் நடித்தும் நிகழ்வுகளில் பிரதான அறிவிப்பாளராகவும் செயற்பட்டவர்.

பக்கத்து கிராமமான கட்டைபறிச்சான் இசை குழுவிலும் அறிவிப்பாளராக செயல்பட்டது ஞாபகமுண்டு.

அறிவிப்பு துறையில் அப்போது கோலோச்சிய கே.எஸ் ராஜாவின் குரலில் சிறப்பாக அறிவிப்பு பணியைச் செய்து கொண்டிருந்தார். இவருக்கு "மதுரக் குரலோன்" என்ற பட்டம், தமிழ் கலா மன்றத்தால் 75 களில் வழங்கப்பட்டது குறிப்பிடப்படுகிறது.

சம்பூர் சமூகம்........

படிப்பு முடிந்தும் சம்பூர் தாபால் ஊழியரா தனது வாழ்க்கையை தொடங்கினார். சம்பூரில் எனது அம்மவின் உறவு பெண்ணை திருமணம் செய்து நல்லதொரு குடும்ப தலைவனாக செயற்பட்டார்.

சம்பூர் இந்து இளைஞர் மன்றத்தின்" பொருளாளராக இருந்து செயற்பட்டார். 1990 காலப்பகுதியில் "சம்பூர் அரசயடி விநாயகர் நாகம்மாள்" ஆலயத்தின் உடைய ஆலய பரிபாலன சபைத் தலைவராக பணியாற்றினார். சம்பூர் ஆலய பரிபாலனசபையின் உபசெயலாளராக தொடர்ந்து பணியாற்றி வருகிறார் .

வீரகேசரி பத்திரிகையின் மூதூர் பிராந்திய நிருபராக தனது பணியை பல ஆண்டுகளாக செய்து வந்தார்.

நாக் கோல்ட் பிங்கர் Gold Finger என பெயர் வைத்த கரப்பந்தாட்டு விழையாட்டு கழகம் பின்னாளில் YMTA என மாற்ற பட்டு குட்டியின் தலைமையில் தற்போது இராம கிருஷ்ணா எனும் பெயரில் இன்றும் நிலைத்து நிற்பதில் எனக்கும் மகிழ்ச்சியே...

முக்கியமாக மற்றவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதம் என்னை வெகுவாக கவர்ந்து இருந்தது. எனது சகோதரி வதனா சொல்வார் எங்கு கண்டாலும் சைக்கிளில் இருந்து இறங்கி என்னை விசாரிப்பானாம்

நாடக நடிப்பு, இசை, அறிவிப்பு விளையாட்டு என பல்துறைகளில் அதனது திறமையை வெளிப்படுத்தியவர் நண்பன் குட்டி என்பதில் எனக்கும் மகிழ்ச்சியே.....

மரண செய்தி அறிந்ததும் நம்ப முடியாது பொய்யாகவே இருக்கு இருந்தது. மற்ற நண்பர்களுடன் பேசும் போது குட்டியை பற்றியும் விசாரிப்பேன் . உண்மையாகவே அவனை இழந்தது சம்பூரில் எனக்கு ஒரு தொடர்பு இறந்ததாகவே கவலை படுகிறேன்.....

அவனது மனைவி பிள்ளைகள் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன ........

**Balasingam Sugumar**
17 May

அஞ்சலி
நண்பர் குமாரநாயகம்

சம்பூர் என்றதும் என் நினைவுக்கு வரும் பெயர்களில் குமாரநாயகமும் ஒருவன்.

பாடசாலைகளில் தொடங்கிய நட்பு கடைசி வரையும் நிலைத்து நின்றது.

மச்சான் என வாயார சொல்லி மகிழ்பவன்,சாரண இயக்க செயல்பாட்டில் மிகுந்த ஈடுபாடு மிக்க நல்ல சாரணன் அவன்.

சாரண இயக்க நடவடிக்கைகளில் இணைந்து பங்குபற்றிய நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்.

சம்பூர் மகாவித்தியாலயம் உருவாக்கிய நல்ல கலைஞர்களில் குமாரநாயகமும் ஒருவன்.

சமூக, சமயப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு ஊரின் முன்னேற்றம் மீது அக்கறை கொண்டு உழைத்தவன்.

இன்று அவனது மரணச் செய்தி பெரும் துயரமாய் என்னுள்.

நண்பனே என் இறுதி அஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Subaharan Thampaiya Subash is with சம்பூர் சச்சிதானந்தம் and 17 others.**

16 May ·

குட்டி அண்ணன் என்று
எல்லோராலும் அன்பாய் அழைக்கப்பட்ட
குமார நாயகம் எனும் புன்னகை மன்னன்(ஓய்வு நிலை தபால் உத்தியோகத்தர்)
இன்று எம்மை விட்டு பிரிந்த பெரும் துயரம்
ஒரு கணம் என்னை உலுக்கியது...
இனி எப்போது காண்போம் இந்த புன்னகை பூத்த முகத்தினை...
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போம்...ஓம் சாந்தி..சாந்தி..சாந்தி..

---

**தவ பிரேம் is with Rajaroopan Rajan and 8 others.**

17 May ·

சம்பூர் மண்ணின்.. ஆரம்பகாலம் தொட்டு தனது
அறிவிப்பின் மூலம் ....தனக்கென்று தனி இடம் பதித்த
அறிவிப்பாளரும் கலைஞரும் ஆகிய கோ.குமாரநாயகம்
இறையடி சேர்ந்தார் .......
ஆலயமாக ,இருக்கலாம்,இசை கச்சேரியாக , விளையாட்டு
போட்டி என்று பல நிகழ்வுகளில் தனது அறிவிப்பு
தன்மையை வெளிகாட்டியவர் .....ஆழ்ந்த இரங்கலை
தெரிவித்து கொள்கிறேன் ....

---

**Yogananthan Kanakasooriyam**

17 May ·

சம்பூரைப் பிறப்பிடமாகக்
கொண்ட ஓய்வுபெற்ற தபாலகர் அமரர்.கோணாமலை
குமாரநாயகம் அவர்கள் காலமான செய்தி
அறிந்து பெரும் துன்பம் அடைந்தேன்.

சம்பூர் கலை-இலக்கிய ஆளுமைகளில்
முக்கியமானவராக அனைவராலும் நன்கு
அறியப்பட்டவர்.நிகழ்ச்சிகளை தொகுத்து
வழங்குவதோடு, சிறந்த அறிவிப்பாளராக
தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்.
தினகரன், வீரகேசரி பத்திரிகைகளின்
பிரதேச நிருபராக செயற்பட்டவர்.

சம்பூர் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
சம்பூர் நாகம்மாள் ஆலயம் போன்றவற்றில்
உபசெயலாளராகவும், உறுப்பினராகவும்
இருந்து அரும்பணியாற்றியவர் .
விளையாட்டுக்களில் ஈடுபாடு கொண்டதோடு,
கழகங்களில் தலைவராகவும் இருந்து
அரும்பணியாற்றியவர் . அன்னார் எமது
நெருங்கிய உறவினரும் ஆவார்.

அன்னாரின் இழப்பினால் பரிதவித்துக்
கொண்டிருக்கும் குடும்பத்தாருக்கும்,
உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய மனதார இறைவனை
வேண்டுகிறேன்.

க.யோகானந்தன்

---

**Ramakrishna Sports Club - Sampur**

14 Nov 2019 ·

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
க .துரைரெட்ணசிங்கம் ஐயாவின் நிதி ஒதுக்கீட்டின்கீழ்
மூதூர் பிரதேச செயலகத்தினால் சம்பூர் இராமகிருஷ்ண
விளையாட்டு கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள்
கழக தலைவரிடம் வழங்கி வைக்கப்பட்டது ..

---

**பிரியங்கன் பாக்கியரெத்தினம்**

17 May ·

ஒரு அறிவிப்பாளராக தன்னை அதிகம்
அடையாளப்படுத்திக்கொண்டவர்
ஓய்ந்து போயிருக்கிறார்

சம்பூர் தமிழ் கலாமன்றத்தினராகிய நாம் வாழும்போதே
உங்களை வாழ்த்திய பெருமிதங்களோடு
அஞ்சலிக்கிறோம்

ஆழ்ந்த அனுதாபங்கள்

---

**சம்பூர் சச்சிதானந்தம்**

17 May ·

நம்மை விட்டுப் பிரிந்த, சம்பூரின் ஆளுமை

கோணாமலை குமாரநாயகம்
(தபாலகர், சம்பூர் ஆலய சபையின் உப செயலாளர்)

சம்பூரின் இலக்கிய ஆளுமைகளில் ஒருவராக தற்போது இறைபதம் அடைந்த

கோணாமலை குமாரநாயகம் அவர்கள் 70 களில் சம்பூர் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் நாடகம், அறிவிப்பு, விளையாட்டு, சமூக சேவை என்கின்ற பல்துறை செயற்பாட்டாளராக காணப்பட்டவர். சம்பூர் தமிழ் கலாமன்றம் இலங்கை பூராவும் கோலோச்சிய காலம் அது. அந்த வகையில் சம்பூர் தமிழ் கலாமன்றத்தின் தலைவராக ஸ்தாபகராக இருந்த கலைஞர் பு. செல்லக்குட்டி அவர்களும் அப்போதைய வடகிழக்கு பிரதேசங்களில் தனது ஒளிபரப்பு சாதனங்கள் மூலமும் நாடகத்தின் மூலம் ஒரு கதாநாயகனாக வலம் வந்துகொண்டிருந்த பி.எஸ் மணியம் அவர்கள் மூலமும் சம்பூர் சித்தி விநாயகர் ஆலய திருவிழா அரங்கிலே ஒரு அறிவிப்பாளராக அறிமுகப்படுத்தப்பட்டு அறிவுத் துறையில் அப்போது கோலோச்சிய கே.எஸ் ராஜாவின் குரலில் சிறப்பாக அறிவு பணியைச் செய்து கொண்டிருந்தார்.

இந்தக் காலத்தில் பி எஸ் மணி அவர்கள் Holland நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு சிறந்த ஒலிவாங்கி (Mic) மூலமே தன்னுடைய ஒளிபரப்பு துறையை மேற்கொண்டு இருந்த நேரத்திலே அந்த ஒலிவாங்கி தான் இவர்களுடைய குரலை சிறந்த ஒரு குரலாக காட்டியது. அதன் மூலம் இவருக்கு "மதுரக் குரலோன்" என்ற பட்டம் தமிழ் கலா மன்றத்தால் 76 களில் வழங்கப்பட்டது குறிப்பிடப்படுகிறது.

சம்பூர் தமிழ் கலாமன்றத்தின் ஆரம்பகால உறுப்பினராக செயற்பட்டார். இந்த காலங்களில் சம்பூரில் இருந்த நியூ இசைக்குழுவின் உடைய அறிவிப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணிபுரிந்தார். பின்னர் ஸ்ரீ முருகன் இசைக்குழுவின் உடைய அறிவிப்பாளராகவும் அதனுடைய தலைவராகவும் செயற்பட்டு வடகிழக்கு பிரதேசமெங்கும் தங்களது இசை நிகழ்ச்சியை தமது குழுவோடு சேர்ந்து நடத்தினார். அத்தோடு மட்டுமல்லாமல் பி .எஸ் மணி அவர்களால் அந்நாட்களில் 74 களில் தயாரிக்கப்பட்ட, சம்பூர் தொடக்கம் சம்மாந்துறை வரை பேசப்பட்ட "தங்கையின் பாசம்" நாடகத்தின் பிரதான அறிவிப்பாளராக, தொகுப்பாளராக செயற்பட்டார்.

அந்த காலத்தில் பி. எஸ் மணி அவர்களால் தயாரிக்கப்பட்ட "இப்படியும் ஒரு பெண்ணா" என்ற நாடகத்தில் வழக்கறிஞராக நடித்து தனது நடிப்புத் துறையில் ஆர்வத்தை வழிகாட்டினார். பின்னர் தொடர்ச்சியாக சம்பூர் பிரதேசத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் சம்பூர் தமிழ் கலாமன்றத்தின் ஆல் நடாத்தப்பட்டு வந்த நிகழ்வுகளில் பிரதான அறிவிப்பாளராக கே எஸ் ராஜா பாணியிலேயே அறிவித்து பாராட்டைப் பெற்றார்.

76 களுடைய காலங்களில் "சம்பூர் இந்து இளைஞர் மன்றத்தின்" பொருளாளராக இருந்து செயற்பட்டார். அப்போதைய காலத்தில் தலைவராக திரு தி. தங்கவடிவேல் (RDO) இப்போது சுவிற்சலாந்தில் வாழ்கிறார். அவர்களும், செயலாளராக கன்னங்குடா அருள்ராஜா அவர்களும் கடமையாற்றிய போது சுழற்று சௌந்தரராஜன் பாடகரை சம்பூர் பிரதேசத்திற்கு அழைத்துவந்து சிவராத்திரி தினத்தில் மாபெரும் இசை நிகழ்ச்சியை நடத்தி அதனை நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியில் சிறப்பாக செய்தார். இக்காலப்பகுதியில் கடைசியாக இப்பிரதேசத்தின் சிறந்த இசைக்குழுவான "கலைவாணி" இசைக்குழுவின் அறிவிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு மட்டுமல்லாமல் ஒரு பல் திறமை வாய்ந்த ஒருவராக கிழக்கு மாகாணத்தில் ஒரு சிறந்த குறுந்தூர ,நெடுந்தூர ஓட்ட வீரராக காணப்பட்டார். பல சான்றிதழ்களையும் வெற்றிக் கிண்ணங்களையும் வெற்றி பெற்றவர். 1990 காலப்பகுதியில் "சம்பூர் பரசபடி விநாயகர் நாகம்மாள்" ஆலயத்தின் உபதலைவர் ஆலய பரிபாலன சபைத் தலைவராக பணியாற்றி சமயத்திற்கும் கல்விக்கும் தொண்டாற்றினார். தற்போது இதுவரை சம்பூர் ஆலய பரிபாலனசபையின் உபசெயலாளராக தொடர்ந்து பணியாற்றி வருகிறார் .

90 காலப்பகுதியில் இருந்து ஒரு ஊடகவியலாளராகவும் பரிணமித்தார். "வீரகேசரி" பத்திரிகையின் முதூர் பிராந்திய நிருபராக தனது பணியை பல ஆண்டுகாலம் செய்து வந்தார்.

எண்பதுகளில் சம்பூர் YMTA விளையாட்டுக்கழகம் மூலம் கரப்பந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றி சிறந்த விளையாட்டு வீரராக திகழ்ந்த போதும். அந்த விளையாட்டு கழகத்தினுடைய தலைவராக பின்னாளில் இராமகிருஷ்ணா விளையாட்டுக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்றைவரை இருந்து இயங்கி வருகின்றார். இராமகிருஷ்ண விளையாட்டுக் கழகம் அகில இலங்கை ரீதியில் பல வெற்றிகளைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரை சம்பூர் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக செயற்பட்டு பாடசாலையின் வளர்ச்சி அபிவிருத்திச் பணியில் ஈடுபட்டார்.
அவருடைய அறிவிப்பு பணி பல்துறை சார்ந்து இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இவருடைய மூத்த சகோதரரே சம்பூர் இலக்கிய ஆளுமைகளில் ஒருவரான கற்பூரணம் கோணாமலை திருவிளாசா ஆவார்.

Copy- கனக யோகானந்தன்

---

**தமிழ்மாறன் மாறன்**
17 Mar ·

அப்பொழுதும் அம்பாள் இறைவனை நேசிப்பேன் நேசிக்கின்றவர்களையும் இறைவனின் சிந்தனையோடு இருப்பவர்களையும் நீண்ட நாட்கள் வாழ விடுவதில்லை அமரர் குமர நாயகம் ஐயா அவர்கள் சம்பூர் பத்திரகாளியம்மன் ஆலயம் பொறுப்பெடுத்த காலத்தில் இருந்து விலகும் வரை அம்பாளோடும் என்னோடும் மற்றவர்களோடும் ஒருங்கே பயணித்து ஒருவர் நல்லவர்களை மற்றவர்கள் வாழ விடுவதில்லை அது மனிதனுடைய இயல்பு போட்டி இருக்க வேண்டும் பொறாமை ஒருபோதும் இருக்கக் கூடாது ஆகவே குமர நாயகம் ஐயா அவர்களுடைய இந்த மரணச் செய்தி கேட்டு மனவேதனை அடைந்தேன் அண்மையில் அவரை நான் நேரில் சென்று பார்த்துவிட்டு வந்தேன்.
பத்ரகாளியினுடைய அனுக்கிரகம் அவருக்கு இருக்கும் அவர் மீண்டும் அந்த ஆலயத்தைப் பராமரிப்பார் என்ற ஒரு நம்பிக்கை எனக்கு இருந்தது ஏதோ அம்பாள் அவரை உனது பணி போதும் என்னுடைய இடத்துக்கு வந்து சேரு என்று சொல்லி அவரை எடுத்திருப்பது போல் தெரிகிறது சம்பூர் பத்திரகாளியினுடைய ஆலயத்திலே பல மனிதர்களை பார்த்திருக்கின்றேன் ஆனால் குமர நாயகம் ஐயா போன்று நடுநிலையான ஒரு மனிதர் யாருமே கிடையாது அப்படியான நடுநிலை வைக்கக்கூடிய மனிதர்களை ஒருசிலர் விட்டு வைப்பதும் இல்லை அது அவர்களுடைய பொறாமைத்தனம் என்பது உண்மையான கருத்தாகும் ஆகவே அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சம்பூர் பத்திரகாளியம்மன் உடைய ஆசீர்வாதமும் எல்லாம் வல்ல கோணநாத பெருமானுடைய ஆசீர்வாதமும் அன்னாருடைய ஆத்மா சாந்தி பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்னாருக்கும் அன்னாருடைய குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்
திருக்கோவிலூர் கவி

---

**Raj Keethan**

சிறந்த மனிதர் சிறு வயது முதல் எனக்கு நன்றாக தெரிந்த ஒரு நபர் வாழ்க்கையில் எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் அவர் உதட்டோரத்தில் சிறு புன்னகை எப்போதும் குறைவில்லாமல் இருக்கும் ஏற்றுகொள்ள முடியாத இழப்பு ஒருநாள் திருமூலரிடம் அவரது சீடன் ஒருவன் நான் மனதால் தூய்மையான ஒருவனாக மாறி விட்டேனா குருவே என்று கேட்கின்றார் அதர்க்கு அவர் சொல்கின்றா சீடனே நானே இன்னும் தூய்மையான ஒருவனாக மாறவில்லை தூய்மையான ஒருவனுக்கு பாவிகள் வாழும் பூலோகத்தில் இடம் இல்லை ஒருவன் எப்போது தூய்மையானவனாக மாறுகின்றானோ அவன் அப்போதே சிவன் அடி சேர்கின்றான் என்று அப்படி பட்ட ஒரு தூய நிலையை அடைந்த ஒருவராகவே குட்டி ஐயா எப்போதும் எம்மனதில் நீங்காத இடம் பிடித்தவராக உள்ளார்

---

**Subaharan Thampaiya Subash**

தில்லைநாதன் சம்பூர் சம்பூர் இராம கிருஷ்ணா (கரப்பந்தாட்ட) விளையாடுக்கழகத்தினை சிறப்பாக வழி நடாத்தி வட கிழக்கில் இடம் பெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் கழகத்தினை பங்கு பெறச் செய்து தொடர் வெற்றிகளைப் பெற்று சம்பூர் மண்ணிற்கு பெருமை சேர்த்த மாமனிதர்...

---

**தில்லைநாதன் சம்பூர்**

சிறந்த மனிதன் தெளிவான குரல் வளம் படைத்த அறிவிப்பாளர் விளையாட்டுக் கழகங்கள் ஆலயங்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கம் இன்னும் சம்பூர் கிராம அபிவிருத்திப் பணிகளிலும் முன் நின்று உழைத்த மனிதர் அன்னாரின் இழப்பைக் கேழ்வியுற்று கவலை அடைந்தேன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறேன்

See Translation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டு அமைச்சு

1976 வைகாசி மாதம் இரண்டாம் ந் திகதியில்

மூதூர் பிரிவு உதவி அரசாங்க அதிபர்/பிரிவுக் காரியாதிகாரி பகுதியின் கிராம சேவகர் பிரிவிற்கிடையில் நடைபெற்ற

800 மீற்றர் விளையாட்டுப் போட்டியில்

திரு/திருமதி/செல்வி K. குமாரலிங்கம் அவர்கள்

1 முதலா வது இடத்தைப் பெற்றுக்கொண்ட

சம்பூர் வி/ கே/ கழ விளையாட்டுக் கழக வீரர்/ வீராங்கனை

என இந்நால் உறுதிப்படுத்துகின்றோம்.

திறமைத் தன்மை

விளையாட்டு உத்தியோகத்தர்

பி. உ. அ. அ. / பி. கா.

பி. உ. அ. அ. / பி. கா. பிரிவு

Skyline Trinco 127-76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் வழிகாட்டியாய் செயல்படுத்தினராய் தனிப்பெரும் தலைவனாய் வழிநடத்தி, தன் முழு வாழ்வையும் அர்ப்பணித்து எம்மையும் தன் உறவினர்களையும் தூக்கிவிட்டு, மாறாநோயின் காரணமாக எம்மை விட்டுப் பிரிந்து பரமபதம் அடைந்து விட்ட எமது தெய்வத்தின் பிரிவின் சோகத்தில் நாம் ஆழ்ந்திருந்தபோது, எம் நிலை உணர்ந்து உற்ற உதவி தந்து, ஆறுதல் மொழி பேசி, நேரில் வருகை தந்தும், கைபேசி மூலமும், முகநூல், இணையம் மூலமும், பத்திரிகை மூலமும் அனுதாபம் கூறியும் பனர் அஞ்சலி செலுத்தியும், இரங்கலுரை நிகழ்ச்சி, பாடைகட்ட உதவியும், இடுகாட்டில் கிடங்கு வெட்டியும், நல்லடக்கத்துக்கு வருகை தந்து உதவியும், இரவு நேர பிரசன்னங்களிலும், பங்குபற்றியும் உணவு வழங்கியும், எட்டாம் நாள் கிரியைகளில் கலந்து கொண்டு வழங்கிய உதவிகளுக்கும், சம்பூர் மரண நலன்புரிச்சங்கம் வழங்கிய ஒத்தாசைகளுக்கும், சைவப் புலவர் திரு.அ.குகராசா அவர்கள் கிரியைகளை ஒழுங்கமைத்து நிகழ்த்தியமைக்கும் நாம் மனமுருகி சிரந்தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


திருமதி.உதயசந்திரிகா (மனைவி), திருமதி.பிரச்சாந்தன்
நிரோஷனா (மகள்) திரு.கோபிசாந் (மகன்)
செல்வி சுதர்சனா (மகள்), திருமதி ம.நாகபாக்கியம்
(அக்கா), திருமதி செ.வடிவம்மா (மாமி)
மற்றும் மருமக்கள் மச்சான், மச்சாள், உறவினர்கள்.
071 6778856

"தங்க பவனம்" சம்பூர் -05,
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
# ஆலய பணியில் / நிகழ்வுகளில் சிறப்பித்தபோது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
## ஆலய பணியில் / நிகழ்வுகளில் சிறப்பித்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1955 | 2023 |
| 09 | 05 |
| 10 | 16 |

## அமரர் : கோணாமலை குமாரநாயகம்

சம்பூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கோணாமலை குமாரநாயகம் (ஓய்வுநிலை தபாலகர், முன்னாள் சம்பூர் ஆலய பரிபாலன சபை உப செயலாளர், ஓய்வூதியர் சங்கத்தலைவர், இராம கிருஷ்ணா விளையாட்டுக் கழகத் தலைவர், முன்னாள் சம்பூர் ம.வி. பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், முன்னாள் சம்பூர் அரசடி விநாயகர் நாகம்பாள் ஆலய பரிபாலனசபைத் தலைவர்) அவர்கள் 16.05.2023 செவ்வாய் அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் அமரர்களான, கோணாமலை தங்கம்மா தம்பதிகளின் செல்லப்புதல்வரும், அமரர் அகிலாண்டநாயகி, நாகபாக்கியம், அமர் திரவியராசா, அமரர் மணிராசா ஆகியோரின் சகோதரரும், அமரர் செல்லத்தம்பி, வடிவம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் உதயச்சந்திரிக்காவின் அன்புக் கணவரும் நிரோசனா (லண்டன்), கோபிசாந் (வீடமைப்பு அதிகாரசபை கட்டிடப்பொருள் முகாமையாளர்), சுதர்சனா ஆகியோரின் அன்புத்தந்தையும், நா. பிரசாந்தனின் (லண்டன்) அன்பு மாமனாரும், பி. கேஷிகா (லண்டன்), அவர்களின் அம்மப்பாவும், அமரர் மகேந்திரம், கோ. விமலாதேவி, செ. நித்தியானந்தராசர், ர. பத்மாவதி (லண்டன்), செ. பரமேஸ்வரன், ஜெ. ரஜனிதேவி, சி. கௌரிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ம. சச்சிதானந்தம் (அதிபர்), ம. ஸ்ரீதரஆனந்தம் (அதிபர்), அமரர். நிர்மலானந்தன், ர. நிர்மலா, ர. புவந்தி, கி. உதயபானு ஆகியோரின் அன்புத் தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரின் திருவுடல், சகோதரியின் (ம. நாகபாக்கியம், சம்பூர்-05.) இல்லத்தில் இருந்து 17.05.2023 புதன், மாலை 04.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக சம்பூர் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார் உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
0778092554



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

கணபதிப்பிள்ளை கோணாமலை
\+
சின்னதம்பி தங்கம்மா

- அமரர்.அகிலாண்ட நாயகி
- நாகபாக்கியம் + அமரர்.மகேந்திரம்
  - சச்சிதானந்தம்
  - ஶ்ரீதர ஆனந்தம்
  - நிர்மலா
  - நிர்மலானந்தம் (அமரர்)
  - புவநந்தி
  - உதயபானு
- அமரர்.திரவியராஜா
- அமரர்.மணிராசா
- **அமரர்.குமாரநாயகம்**

செல்லத்தம்பி
\+
வடிவம்மா

- விமலாதேவி
- நித்தியாளந்தராசா
- விக்னேஸ்வரன் (அமரர்)
- பத்மாவதி
- பரமேஸ்வரன்
- ரஜினிதேவி
- கௌரிதேவி
- **உதயசந்திரிகா**

**அமரர்.குமாரநாயகம்** — **உதயசந்திரிகா**

- நிரோசனா (லண்டன்) + பிரசாந்தன்
  - கேஷிகா
- கோபிசாந்
- சுதர்சனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு நிகழ்வுகளின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நினைவுத் தடங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருந்தாய்,
அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்து கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.





BEN VISION PRINTERS
0769000035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org